# அருள் ஒளி




புரட்டாதி~2025

இதழ்: 171

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (புரட்டாதி ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பிடியரிசித் திட்டம் நிறைந்த வெற்றி பெற்றுள்ளது

**ஆசிரியர் உரை**

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்த பெருந் திருவிழா ஆகிய மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய நிர்வாக சபை தலைவர் வெளியிட்ட அறிக்கை மிகவும் பயன் தந்துள்ளது. குறிப்பாக சைவ பாரம்பரியத்தின் எல்லா மக்களும் இணைந்து ஆற்றுகின்ற திருத்தொண்டு அன்னதானம். யாழ்ப்பாணத்தில் அன்னதானத்திற்கு என்று நீண்ட பாரம்பரியம் உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் மதியம் சமைக்கும் போது உலையிலே அரிசி போடுகின்ற போது ஒரு பகுதி பிடியரிசியாக எடுத்து வைத்து அதை சேர்த்துக் கொண்டு வந்து அன்னதானத்துக்கு கொடுப்பர். இந்த பிடியரிசி திட்டம் நாவலப் பெருமான் காலத்தில் சிறப்பு பெற்றது. யாழ்ப்பாண இந்து கல்லூரியின் வரலாற்றில் கூட ஆரம்பத்தில் அந்த பாடசாலையை நிர்வாகிப்பதற்கு பிடியரிசித் திட்டமே பெரும் உதவி புரிந்தது என்பதை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாணவர்கள் பிடியரிசி சேர்த்து அக்காலத்தில் பசுபதி செட்டியார் என்கின்ற பெருமகன் அரிசிகள் கணக்குகளை எல்லாம் வைத்திருந்து அந்த அரிசிகளை விற்றுத்தான் பாடசாலை கூரை வேய்ந்ததாகவும், ஆசிரியர்களுக்கு வேதனம் கொடுத்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.


இதுபோல ஊர் தோறும் பிடியரிசித் திட்டம் இருந்தது. கஞ்சித் தொட்டி தர்மமத்திற்கு பிடியரிசி தான் பெரும் உதவியாக இருந்தது என்பது வரலாறு.

ஆனால் இன்று இந்த பிடியரிசித் திட்டம் எல்லாம் குறைந்து கொண்டு வருகின்ற வேளையில் ஆலய திருவிழாவை முன்னிட்டு நடைபெறப் போகின்ற அன்னதானத்திற்கு பிடியரிசியாக உங்கள் ஒவ்வொருவரின் வீட்டில் இருந்து கொஞ்ச அரிசியை கொண்டு வந்து இந்த பாத்திரத்தில் போடுங்கள் என்று தலைவர் கூறினார். என்ன ஆச்சரியம் ஏராளமான அடியவர்கள் அரிசி கொண்டு வந்து கொடுத்தார்கள். ஒரு பிடி அரிசி கூட இந்த முறை அன்னதானத்திற்கு காசு கொடுத்து வாங்கப்படவில்லை. ஏழை பணக்காரர் என்ற பேதம் இன்றி அனைவரும் தமது காணிக்கையாக அரிசியை கொண்டு வந்து கொடுத்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம் தொடர இருக்கிறது. திருவிழாக்கு மட்டுமல்ல செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகின்ற அன்னதானங்களுக்கும் பிடியரிசி திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த ஆலயம் திட்டமிட்டுள்ளது. உண்மையிலேயே இத்தகைய நல்ல செயல் திட்டங்கள் ஏனைய கோயில்களிலும் உருவாக்கப்பட வேண்டும்.

ஏனைய கோயில்கள் பிடியரிசித் திட்டங்களை உருவாக்குகின்ற போது வீடுகளிலே ஒரு தெய்வ நம்பிக்கை ஏற்படும். எந்த பேதமும் இன்றி எல்லோரும் பிடியரிசி சேர்த்து அதை கோயிலிலே கொடுக்கின்ற போது தாமும் உரிமையோடு அன்னதானத்தில் பங்கு பெற்றுகின்றோம் என்ற மகிழ்ச்சி உருவாகும்.

அதுமட்டுமின்றி இது ஒரு தெய்வ காரியம். பிடியரிசி திட்டத்தினால் யாழ்ப்பாணத்தில் சத்திரங்கள், மடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் இயங்கி இருக்கின்ற வரலாற்றை வருங்கால சமூகம் உணர்வதற்கும், பின்பற்றுவதற்கும் இது ஒரு அரிய வாய்ப்பாகும். இந்த வாய்ப்பு மீண்டும் பரிச்சார்த்தமாக தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தில் தொடங்கிய போது நிறைய வெற்றியை சந்தித்திருக்கிறது. எனவே இந்த நல்ல பண்பாட்டை ஏனைய இடங்களிலும். பேணுவோமேயானால் மேலும் ஒரு பக்தியும் உயர்ந்த பண்பாடும் எங்கும் நிலவும் என்பதில் ஐயமில்லை.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**ஆசிரியர் ~ அருள்ஒளி**



# பக்தி பூர்வமாக நடைபெற்றுவருகிறது தெல்லியூர் துர்க்காதேவியின் மகோற்சவம்


உலகப்புகழ் பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் தொடரும் பழமைகளோடு சில புதுமைகளையும் சேர்த்து மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் வழிநடத்தலில் இம்முறை அறிமுகமாகியுள்ள சில புதிய அம்சங்கள் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. ஒவ்வொரு திருவிழாவும் மிகவும் சிறப்பாக பக்தர்கள் கூட்டத்துடனும் ஆன்மீக நாட்டத்துடனும் நடைபெற்று வருகிறது.











Raju view



GL Tharshan






Raju view

Raju view




# துர்க்காபுரம் மகளீர் இல்லப் பிள்ளைகளுக்கு நடைபெற்ற விசேட ஆளுமை விருத்தி நிகழ்வு

உலகப் பிரசித்தி பெற்ற கேம்பிறிஜ் பல்கலைக்கழக கல்விமான் கலாநிதி ளு.சபேசன் அவர்கள் எமது துர்க்காதேவி தேவஸ்தானத்தின் துர்க்காபுரம் மகளீர் இல்லப் பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கினார்கள். எமது இல்ல பிள்ளைகள் கல்வியிலும் வாழ்விலும் விழுமியத்திலும் முன்னேற்றமடைய இந்த கலந்துரையாடல் மிகப்பயனுள்ளதாக இருக்குமென கலந்துரையாடல் முடிந்த பின்னர் பிள்ளைகள் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

தமது வேலைப்பழுவுக்கு மத்தியிலும் எமது பிள்ளைகளுக்காக வந்து தனது கருத்துக்களை பகிர்ந்தமைக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



# ஆவணி சதுர்த்தி அன்று எமது தேவஸ்தானத்தில் ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றது



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விநாயகப் பெருமானுக்கு ஆவணி சதுர்த்தி நாளில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றது. அதோடு குழந்தைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# பக்தர்களின் பூரண ஆதரவுடன் செயல்வடிவம் பெற்றுள்ள பிடியரிசி திட்டம்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மகோற்சவ காலம் முழுவதும் ஆலயம் நாடி வரும் பக்தர்களுக்கு அடையாத பெருங்கதவோடு அன்னதானம் சிறப்புடன் நடைபெறுவது வழமை. அந்த புண்ணியம் சகலரையும் சேர்வதற்காக பிடியரிசி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பக்தர்கள் தங்களால் இயன்ற ஒருபிடி அரிசியேனும் ஆலயத்திற்கு அளிக்க முடியும் என்று கூறப்பட்டதாயினும் அங்கே பெருமளவு அரிசி தொடர்ச்சியாக சேர்ந்தவண்ணம் உள்ளமை அம்பாள் திருவருள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட பிடியரிசித் திட்டத்திற்கு பூரணவெற்றி கிடைத்துள்ளதாக தெரிய வருகிறது. தினமும் பெருமளவான அடியார்கள் இந்த கைங்கரியத்திற்கு பிடியரிசி வழங்கி உதவுகிறார்கள். இந்த பிடியரிசித்திட்டம் துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் எண்ணத்தில் தோன்றி செயல் வடிவம் பெற்றமை சிறப்பிற்குரியது.











# எந்நிதியும் தருகின்ற செல்வச்சந்நிதியான்

சந்நிதியானின் கொடியேற்றத்தில் நடப்பது என்ன?

ஆகமம் சாராத பக்திசார் வழிபாட்டு மையமாக இருக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் கொடியேற்ற நிகழ்வு ஏனைய ஆலயக் கொடியேற்ற நிகழ்வுகளில் இருந்து வேறுபட்டதாகும். ஆவணி மாத பூர்வபக்க பிரதமை கூடும் நேரத்தில் இங்கு கொடியேற்றம் இடம்பெறுவது வழமை. அந்த வகையில் இம்முறை கொடியேற்றம் கடந்த 23.08.2025 சனிக்கிழமை நிகழ்ந்தது.

வைரவப் பெருமானுக்குக் காப்புக் கட்டிப் பின்னர் பிள்ளையார் பூசை மூலவரான வேலவருக்குப் பூசை என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வான கேடகப் பூசை இடம்பெறும். ஆலய வாயிலில் மூலஸ்தானத்தை நோக்கியவாறு உள்ள நந்திக்கு (இடபத்திற்கு) முன்பாக கேடயம் வைக்கப்பட்டிருக்கும் . (கேடகம் என்பது சுவாமியைக் காவிச்செல்லும் கூடு) கேடகத்தின் உச்சியில் உள்ள கலசத்தில் தருப்பை, ஏழு மாவிலைகள் என்பவற்றைப் பட்டுத் துண்டால் கட்டி பூசை இடம்பெறும். இதனைக் கலச பூசை என்கின்றனர். இதுவே கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வு. கொடியேற்றம்





நிகழ்ந்ததன் அறிகுறியாக ஆலய வாயிலில் சேவல் கொடியைப் பறக்கவிடுவர். அதன்பின் எழுந்தருளி வேலவருக்குப் பூசை இடம்பெறும். அவரை கேடகத்தில் எழுந்தருளச் செய்து உள்வீதியுலா வரச் செய்வர்.

வள்ளி அம்மன் வாசலுக்கு எழுந்தருளி வேலவர் வந்ததும் அவரை வள்ளி அம்மன் கோவிலுக்குக் கொண்டு சென்று தீர்த்தக் குளத்தில் நீர் எடுத்து வேலவருக்கும் வள்ளி அம்மைக்கும் விசேட பூசை இடம்பெறும்.

தொடர்ந்து கேடகத்தில் எழுந்தருளி வேலவர் வெளிவீதியுலா வருவார். கோவிலுக்கு வடக்குப் புறமுள்ள வாயிலில் (கதிர்காம வாயில்) தீர்த்தக் குளத்தில் நீர் எடுத்து கும்பம் வைத்து அர்ப்பணிப்பர். நூற்றுக்கணக்கான தேங்காய்களை சிதறு தேங்காயாக உடைத்து அர்ப்பணிப்பர்.

அர்ப்பணங்கள் நிறைவுற்றதும் வேலவர் தனது சந்நிதானத்தை வந்தடைவார். சந்நிதியில் பூசை செய்பவர்களைப் பூக்காரர் என அழைப்பர். இவர்கள் வாய்கட்டியே பூசை செய்வர்.

பூசை முறை தமக்குத் தெரியாது என இவ்வாலயத்தைத் தாபித்த மருதர் கதிர்காமர் முருகப் பெருமானிடம் கோரியபோது முருகன் அவரை கண்மூடுமாறு பணித்ததாகவும் அடுத்த கணம் கதிர்காமத்தில் அவரை சேர்ப்பித்ததாகவும் அதன் மூலம் பூசை முறையையும் வேல் ஒன்றையும் அவர் பெற்றதாகவும் ஐதிகம் உண்டு.



முருகனும் கதிர்காமரும் உரையாடிய இடம் ஆலய முகப்பில் உள்ள நந்திக்கு அருகில் உள்ள இரண்டு குந்துகள் ஆகும். இந்த இரண்டு குந்துகளிலும் அவர்கள் எதிர்




எதிர் இருந்து கதைத்தார்கள் என்ற நம்பிக்கையில் அக்குந்துகளில் எவரும் இருப்பதுவும் இல்லை. ஏன் அதற்குக் குறுக்கே போகக் கூடாது (அதாவது நேர் வாயிலால் கோவிலுக்குள் போகக்கூடாது) என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது.

மூலவராக வேற்பெருமான் உள்ளார். இதைவிட அடியவர்கள் வழங்கிய வேல்களையும் இங்கு வைத்துள்ளனர். முருகனது உபதேசப்படி உப்பு இடாமல் 65 ஆலம் இலைகளில் வெண்பொங்கல் படைக்கப்படுகின்றது. இதுவே முருகனுக்கான பிரசாதம். இதனை மருந்து என்றுதான் அழைப்பர்.

சந்நிதியில் விபூதி வாங்கும் போது ஒரு கையால் வாயைப் பொத்தியபடி நிற்க பூசகர் விபூதியைப் பெறவேண்டியவருடைய சிரசில் விபூதியை தூவி நெற்றியிலும் பூசிவிடும் மரபும் உள்ளது. மருதர் கதிர்காமர் முருகனிடம் தனக்கு விபூதி கொடுக்கத் தெரியாதே என்று கூறியபோது இப்படி விபூதியைக் கொடு என முருகன் வழிப்படுத்தினார் என நம்புகின்றனர். இதனால் அவரது சந்ததியினரும் அந்த மரபைப் பின்பற்றுகின்றனர்.

சந்நிதித் திருவிழாவையொட்டி வழமை போல சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினந்தோறும் அன்னதானம் மற்றும் ஆன்மீக உரைகள் இடம்பெறவுள்ளன. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டிலும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(சந்நிதியில் நடக்கும் பூஜை முறைகளை விளக்கி சொன்ன ச.லலீசன் அவர்களுக்கு நன்றி)

ஆக்கம் ~ மு.பாபுஜி
பண்ணாகம்




# பொன்னாலை வரதராஜர் மகோற்சவம் ஆரம்பமாகியது

அருட்பெருமையும் வரலாற்றுப் பழமையும் மிக்க, சொர்ணாலயம் என சிறப்பாக போற்றப்படும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த மகோற்சவம் 28.08.2025 அன்று நண்பகல் 12 மணிக்கு தெய்வேந்திர முகூர்த்தத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.







மிகுந்த ஆன்மிக உற்சாகத்துடனும் பக்தி பூர்வமாகவும் மகோற்சவம் நடைபெற்றுவருகிறது. ஒவ்வொரு நாளும் காலை, மாலை நடைபெற்ற சிறப்பு ஆராதனைகள், அரங்கனின் திருப் தக்கபாடல்கள், வேதமந்திர உச்சாடனங்கள் மற்றும் இசை வாத்தியக் குழுக்களின் பங்கேற்பு வழிபாட்டின் பெருமையை உயர்த்தியது. அலங்காரத் திருக்கோலங்களில் வரதராஜப் பெருமாள் உலா வருகை தந்து பக்தர்களை அருளால் பூரிக்கச் செய்கிறார்.








# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் திருமஞ்ச வெள்ளோட்ட விழா சிறப்பு மலருக்கு (ஆவணி-2009) கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் வழங்கிய சிறப்பு செய்தி



மாவட்டபுரம் கந்தசாமி கோயில் ஆதின கர்த்தா மகாராஜஸ்ரீ து. சண்முகநாத குருக்கள் ஆசிரியரை வழங்கும் காட்சி...

தேசம் போற்றும் தெல்லிநகர்த் துர்க்கை அம்மனின் திருவீதியில் திருமஞ்சம் பவனிவரும் காட்சியைக் காணத் திருவருள் பாலித்த துர்க்காதேவியை பிரார்த்திக்கின்றேன். துர்க்கை அம்பாளின் மீளா அடியவராக என்னை ஆற்றுப்படுத்தி, அவையத்தில் முன்நின்று பணி செய்ய வைத்த அள்ளை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் திருவடிகளை நீள நினைந்து வணங்குகிறேன். துர்க்காதேவிக்கு திருமஞ்சம் உருவாக்குவதற்கு நல்லாசிகளையும், அறிவுரைகளையும் வழங்கிய மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கும், கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் சமர்ப்பிக்கிறேன்.

அம்பாளின் திருமஞ்சத்தில் மிகவும் ஆவல் கொண்ட எங்கள் தேவஸ்தானத்தின் பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்களின் நல்லார்வத்துக்கும், நல்லாசிக்கும் நன்றியுடையோம். எங்கள் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் இப்பணியில் மிகவும் அக்கறை கொண்டு உழைத்தமை சிறப்புக்குரியது.

திருமஞ்சத்திருவிழா உபயகாரர் திரு. ச. ஆறுமுகநாதன் முதல் பல அடியவர்கள் நிறைவாகத்தந்த காணிக்கையில் அம்பாளின் திருமஞ்சம் மிகவும் அழகாக உருவாக்கம் பெற்றுள்ளது. சிற்பக் கலைஞர் மதிப்புக்கும். அன்புக்குமுரிய திரு. செ. பாலச்சந்திரன்எமது வேண்டுகோளை பெருமனத்துடன் ஏற்று தன் கைவண்ணத்தில் இப்பெருமஞ்சத்தை உருவாக்கியுள்ளார்.

பாலச்சந்திரன் அவர்கள் எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்விமீது கொண்ட விசுவாசமும், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள்மீது

கொண்ட பக்தியும், அவரது சிறப்புக்களுக்குநன்றியுடையோம் எங்கள் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் இப்பணியில் மிகவும் அக்கறை கொண்டு உழைத்தமை சிறப்புக்குரியது. திருமஞ்சத்திருவிழா உபயகாரர் திரு. ச. ஆறுமுகநாதன் முதல் பல அடியவர்கள் நிறைவாகத்தந்த காணிக்கையில் அம்பாளின் திருமஞ்சம் மிகவும் அழகாக உருவாக்கம் பெற்றுள்ளது.

சிற்பக் கலைஞர் மதிப்புக்கும், அன்புக்குமுரிய திரு. செ. பாலச்சந்திரன்எமது வேண்டுகோளை பெருமனத்துடன் ஏற்று தன் கைவண்ணத்தில் இப்பெருமஞ்சத்தை உருவாக்கியுள்ளார். பாலச்சந்திரன் அவர்கள் எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்விமீது கொண்ட விசுவாசமும், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள்மீது கொண்ட பக்தியும், அவரது சிறப்புக்களுக்கு

காரணம் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். அவ்வகையில் இத்திருமஞ்சம் உருவாக்குவதில் மிகவும் அக்கறை கொண்டு உழைத்தமைக்கு யாம் என்றும் நன்றியுடையோம். அவரது சிற்பக் குழுவில் அங்கம் வகித்த அனைவரும் ஆற்றல் நிறைந்தவர்கள் என்பதைத் திருமஞ்சம் எடுத்துரைக்கிறது.



திருமஞ்ச வெள்ளோட்ட விழாவில் ஸ்தபதி செல்லையா பாலச்சந்திரன் அவர்களுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஆசி வழங்கும் காட்சி. அருகில் மாவைக்கந்தன் ஆலய முதல்வர் மகாராஜி து. சண்முகநாதக் குருக்கள்...

திருமஞ்சத் திருப்பணி 10-09-2008 அன்று ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டு இன்று வெள்ளோட்டம் காண வைத்தமை துர்க்காதேவியின் திருவருளே. திருமஞ்சப் பணி ஆரம்பிப்பதற்கு ஆலய வடக்கு வீதி விஸ்தரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வேளையில் வடக்கு எல்லையின் காணிச் சொந்தக்காரர் திரு. வே. செல்வரட்ணம் அவர்களை நாடினோம். அவர் காணி தர சம்மதித்தமை நன்றிக்குரிய விடயமாகும். திருமஞ்சம் தொடர்பாக யான் தொலைபேசியில் விடுத்த வேண்டுகோளை ஏற்று இங்கிலாந்தில் வாழும் திரு. கி. பாலசிங்கம் அவர்கள் (தலைவர், இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம்) மிகவும் பெறுமதியான "பெயின்ற" வகைகளை தனது செலவில் அனுப்பிவைத்தார்கள். அப்பெருந்தகைக்கு அம்பாளின் அருள் நிறைவதாக திருமஞ்சத்தில் பவனி வருவதற்கும் முக்கிய விழாக்களில் துர்க்காதேவியுடன் பவனிவர பலமுருகன் எழுந்தருளி விக்கிரகம் அமைத்தல் நன்று

எனப் பெரியோர்கள் ஆலோசனை வழங்கினர்.



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதின கர்த்தா இராஜ இராஜஶ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஆசிரியரை வழங்கும் காட்சி...

இராஜராஜஶ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் நல் ஆலோசனை வழங்கினார். இந்தியாவிலுள்ள சுவாமிமலையிலிருந்து அழகான பாலமுருகன் எழுந்தருளியை குறுகிய காலத்தில் தனது அன்பளிப்பாக விமானத்தில் உடன் அனுப்பி வைத்தவர் உயர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் கௌரவ செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்). இப்பெரியார் மஞ்சத்துக்கான பவளக்காலை நாட்டி வைத்ததுடன் பல்வேறு உதவிகளைச் செய்து எமக்குப் பெரும் பக்கபலமாக விளங்குவது அம்பாளின் திருவருளே. திருமஞ்சத்திற்கான ஐந்து முடிகளையும் பொறுப்பேற்று உதவிய திரு. வி. கைலாசபிள்ளை தம்பதிகளின் (தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்) உதவிக்கும் யாம் நன்றியுடையோம். திருமஞ்சத்தில் பொருத்துவதற்காக மணிகளை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பொறுப்பேற்று நன்முறையில் செய்வித்து வழங்கியமை இங்கு குறிப்பிடவேண்டும். அவர்களுக்கும் எமது நன்றிகள். யாள்

கொழும்பு சென்றவேளை காலஞ்சென்ற இந்து கலாச்சார அமைச்சர் அன்பளிப்பாக விமானத்தில் உடன் அனுப்பி வைத்தவர் உயர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் கௌரவ செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்). இப்பெரியார் மஞ்சத்துக்கான பவளக்காலை நாட்டி வைத்ததுடன் பல்வேறு உதவிகளைச் செய்து எமக்குப் பெரும் பக்கபலமாக விளங்குவது அம்பாளின் திருவருளே. திருமஞ்சத்திற்கான ஐந்து முடிகளையும் பொறுப்பேற்று உதவிய திரு. வி. கைலாசபிள்ளை தம்பதிகளின் (தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்) உதவிக்கும் யாம் நன்றியுடையோம்.



துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் வெள்ளோட்ட விழாவில் தலைமை தாங்கும் காட்சி..

திருமஞ்சத்தில் பொருத்துவதற்காக மணிகளை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பொறுப்பேற்று

நன்முறையில் செய்வித்து வழங்கியமை இங்கு குறிப்பிடவேண்டும். அவர்களுக்கும் எமது நன்றிகள். யாள் கொழும்பு சென்றவேளை காலஞ்சென்ற இந்து கலாச்சார அமைச்சர் அமரர். மகேஸ்வரன் அவர்களின் பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. மஞ்சத் தரிப்பிடம் அமைப்பதற்கான சீமெந்து முழுவதையும் தந்துதவுவதாகக் கூறி மறுநாளே அனுப்பிவைத்தார்கள். நாயகன் வழியில் நற்பணி தொடரும் நங்கையிள் பண்பு பாராட்டிற்குரியது. அவர்களுக்கு அம்பாள் ஆறுதல் வழங்க வேண்டுகின்றேன். கொழும்பிலிருந்து பொருட்கள் கொண்டுவர உதவிய தொழில் அதிபர் திரு சிள்ளத்துரை அருளானந்தம், மனோச் விமானசேவை நடாத்தும் அன்பர் திரு. மனோகரன் (காரைநகர்) அவர்களின் தாராள மனத்துக்கு யாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். திருமஞ்சத் திருப்பணிக்கு எமது நிர்வாகசபைக்கு பெரிதும் உறுதுணையாக விளங்கும் தேவஸ்தானப் பணியாளர்கள், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் பெர்கள் தொண்டர் சபையினர். துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியையும், வாழ்த்தையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அம்பாளின் அடியவர்கள் தரும் ஊக்கமும் உதவியும் எம்மை வழிப்படுத்துகிறது. அம்பாளின் திருமஞ்சத் திருப்பணி உண்மையிலேயே திருவருளால் நிறைவேறுகிறது இதுவே மெய் என்பதை பரிபூரணமாக உணர்கிறேன்.

**நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து**
**நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள**
**பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்**
**தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே.**

**-அபிராமி அந்தாதி–**

அம்பாளின் திருமஞ்சப் பவனியோடு எம்மண்ணில் விடிவு ஏற்பட்டு அனைவரும் இன்புற்று வாழ வேண்டுதல் செய்து அமைகிறேன்.

“யாவர்க்கும் இன்னுரைதானே”

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
ஆறு, திருமுருகன்

# திருமஞ்சத்தின் மகிமை

அருள் ஒளி ஆவணி – 2009 இலிருந்து
மீள் பிரசுரம் செய்யப்படுகிறது

இந்துக் கோயிற் பாரம்பரியத்தில் இறைவன் மஞ்சத்தில் அமர்ந்து வருதல் சிறப்புற்சவங்களில் ஒன்றாகும். கோயிற் பண்பாட்டில் மஹோற்சவம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. இது பிரம்மோற்சவம் எனவும் அழைக்கப் படும். ஆகமம் கூறும் மரபுப்படி மஹோற்சவம் வருடந்தோறும் நடை பெறும் நைமித்தியக் கிரியை ஆகும். நைமித்தியக் கிரியை என்பது விேட நிமித்தத்தின் பொருட்டு நிகழ்த்தப் படுவதாகும். ஆன்மாக்களின் உயர்ந்த குறிக்கோள் அல்லது இறுதி இலட்சியம் என்பது ஆன்மாக்கள் பிறவித் துன்பத் திலிருந்து விடுபட்டு இறைவளோடு இரண்டறக் கலத்தலாகும். இந்துமதம் கூறும் கிரியை நெறி, வழிபாடு, மெய்யியற் கொள்கைகள், கலை அழகியற் கொள்கைகள் யாவும் இந்த உயர் குறிக்கோளை அடைவதையே நோக்காகக் கொண்டவை அந்த வகையில் பிரம்மோற்சவத்தில் இடம்பெறும் திருவிழாக்கள் முக்கியத்துவம் பெறுவன. மஞ்சத்தின் தோற்றம், அமைப்பு, அதன் முக்கியத்துவம், அழகியல் அம்சம் போன்ற பல்வேறு விடயங்களை இக்கட்டுரை கருத்திற் கொள்கிறது.

**மஞ்சத்திற்குரிய இடம்:**

யாழ்ப்பாணக் கலை கைவினைப் பாரம்பரியத்தில் பண்பாட்டை வெளிப் படுத்துவதில் நுண்கலைகள் முக்கியத் துவம் பெறுவதுபோன்று கைவினைக் கலைகளும் முதன்மை பெறுகின்றன. மரச்செதுக்கல் வேலைப் பாடுகளில்தேரைப்போன்று மஞ்சமும் அழகிய வேலைப்பாடுகளை உடையதாகக்காணப் படுகிறது. இச்செதுக்கல் வேலைப் பாடுகள் கைவினைஞர்களது வினைத் திறன். தொழில்நுட்பம், செய்நேர்த்தி, அழகியல் உணர்வினை வெளிப்படுத்து வனவாக உள்ளன. யாழ்ப்பாணக் கோயிற் பாரம்பரியத்தில் எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்சம் 1904இல் பெரிய சந்நியாசியாரின் முயற்சியினால் தேவ கோட்டையைச் சேர்ந்த முத்துராக்கப்ப ஆசாரியினால் வடிவ மைக்கப்பட்டது. இம்மஞ்சத்தில் அண்டவியற்கருத்துக்களும் பௌராணிகக் கருத்துக்களும்

சிற்பங்களாக இடம் பெறுகின்றன.

மஞ்சத் திருப்பணி நடந்த இடம் மஞ்சத்தடி என்று பெயர் பெற்றது. 1908 அளவில் மஞ்ச சிற்ப வேலைப்பாடுகள் முடிவடைந்ததாக அறியப்படுகின்றது. (இணுவை அப்பர் பக். 98), மஞ்சம் சென்ற வீதி மஞ்சத்தடி வீதி என்று அழைக்கப்பட்டது. அன்றைய மஞ்சத் திருவிழாவில் ஆட்டக் காவடிகள், நாட்டுக் கூத்துப் போன்றன இடம் பெற்றதாக அறிய முடிகின்றது. (இணுவை அப்பர் பக். 99). இது தென்னிந்தியச் சிற்பிகளின் கைவினைத் திறனையும் பெரிய சந்நியாசியாரின் அருட்திறனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. எவ்வாறாயினும் 100, 105 வருட காலப் பழமையே மஞ்சத்திற்குண்டு. மஞ்சம் பற்றி ஆகமங்களிலோ சிற்ப சாஸ்திரங்களிலோ குறிப்புக்கள் காணப்படவில்லை

கோயிற் பிரம்மோற்சவத்தில் முக்கியத்துவம் பெறும் திருவிழாக் களில் முதல்நாள் துவஜாரோகணம் (கொடியேற்றம்) இடம் பெறுகின்றது. இது படைத்தற் தொழிலைக் குறிப்பதாக உள்ளது. உற்சவ காலங்களில் தினந் தோறும் அக்கோவிலில் இடம் பெறும் பிரதான கடவுளும், இறைவியும் வாகனத்தில் உலாவருவது வழக்கம். அவ்வாறு உலாவருதல் இறைவனது காத்தற் தொழிலைக் குறித்து நிற்கின்றது. ரத உற்சவம் ஆன்மாக்களின் வினைகளை அழித்தலைக் குறித்து நிற்கின்றது. தீர்த்தோற்சவம் ஆன்மாக் களுக்கு அருளுதலைக் குறித்து நிற்கின்றது. மஞ்சம் இந்த வகையில் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றுடனும் தொடர்பு படுத்தப் படவில்லை. மஞ்சம் என்ற சொல் இருக்கை, ஓய்வெடுத்து ஒய்யாரமாக உட்காரும் இடமாகக் கருதப்படுகிறது. சற்று ஓய்வாக, ஆறுதலாக அலங்காரங்களுடன் இருக்கும் இடமென்று சொல்லலாம். மஞ்சம் இரவிலே இழுக்கப்பட வேண்டியது என்றும் அது சந்திரனைக் குறிப்பதாகவும் கொள்ளப்படுகின்றது.

**மஞ்சத்தின் பொது அமைப்பு:**

மஞ்சத்தின் அடித்தளம் பூசாந்தர வடிவமாகச் செய்யப்படும். இதற்கு மேல் பவளக்கால் இடம்பெறும், இதில் யாளி வேலைப்பாடுகள் இடம் பெறுவது வழக்கம். மேற்றளத்தில் உட்புறத்தில் பந்தல் வேலைகள் இடம்பெறும். இது சொக்கட்டான் பந்தல் அமைப்பில் பலகையில் வடிவமைப்புச் செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டிருக்கும். மேற்தள வெளிப் பகுதியில் எழுதகம் இடம்பெறும். வரிவரியாக ஒரு இஞ்சி கனம் உள்ளமரக்கட்டைகளால் இது அமைக் கப்படும். இதுவும்

பூசாந்தர வடி வமாகவே இருக்கும் இதற்குமேல் சுவர்ப்பலகை இடம்பெறுகிறது. இதன் மேற் கர்ண கூடுகள் இடம்பெறும். இவை ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் வாசல் வைத்துச் செய்யப் படும். இதற்குமேல் பண்டிகை இடம்பெறும். பண்டிகையின் மேல் கலசம் இடம்பெறும். மஞ்சத்தில் இரு பக்கமும் திருவாசி வைக்கப்பட்டு நாசித்தலை இடம்பெறுவது வழக்கம்.

மஞ்சத்தின் அடித்தளத்தில் சில்லுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் சில்லுகளை இணைக்கும் நட்டுப்பார் தளம் இடம்பெறுகிறது. இதற்குமேல் வானவரி, பூசாந்தர வரி, போதியல் வரி, விக்கிரகவரி போன்றன இடம்பெறுகின்றன. முன் புறத்தே குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். குதிரைகள் அமைந்துள்ள பகுதிக்கு மேல் வியாழவரி, தேங்காய்த்தடைச்சட்டம் இடம்பெறும் (அர்ச்சனைத்தேங்காய் விழாதவாறு அமைக்கப்படும்). அதற்கு மேல் தேவாசனம், சிம்மாசனம் இடம் பெறும். சிம்மாசனத்தில் கடவுளர் வடிவங்கள் வைக்கப்படும். மஞ்சத்தில் மணிகள் பூட்டப்பட்டிருக்கும்.

பொதுவாக மஞ்சத்தின் அமைப் பினை சின்னத்துரை சிற்பாலய சிற்பாசாரி சின்னத்துரை நந்தகுமார் என்பவரிடம் மேற்கொண்ட செவ்வியின் அடிப்படையில் பின்வருமாறு விளங்கிக் கொள்ளாலம். மஞ்சம் 3 பகுதிகளை உடையது. முதலாவது பகுதியில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறுகின்றன.

1. சில்லுகள்,
2. அச்சு
3. நட்டுப்பார்
4.நட்டுக்கண்
5. வானவரி
6. தாளங்கவரி
7. ஓய்வுப் பலகை
8. கபோதகம்
9. போதிகை
10. ஒய்வுப் பலகை
11. விக்கிரகவரி
12. ஓய்வுப் பலகை
13, துவாலிப்புப் பண்டிகை.

இரண்டாவது பகுதியில்,
1. பவளக்கால்

2. யாளி வடிவங்கள்
இடம்பெறுவது வழக்கம். பொதுவாக எட்டுப் பவளக்கால்கள் இடம்பெறும்.

மூன்றாவது பகுதியில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறும்.
1. மேற்கூடு (உள்ளே பந்தல் இடம்பெறும்)
2. எழுதகவரி
3. சுவர்ப் பலகை
4. கர்ணகூடு
5. பண்டிகை
6. கலசம்

கர்ணகூடு மூலைகளிலும், மட்டங் களிலும் உயரத்தைப் பொறுத்து இடம்பெறும். பண்டிகையின் இரண்டு பக்கங்களிலும் திருவாசி வைக்கப்பட்டு அதில் நாசித்தலை உருவங்கள் இடம் பெறும்.

அடித்தளத்தில் இடம்பெறும் நட்டுப்பார் அமைப்பை நோக்கின் பிள்ளையாருக்கு ஐந்தும், முருகன், அம்மன் போன்ற கடவுளருக்கு ஆறும், சிவனுக்கு ஏழும் இடம்பெறுவதாக அறிய முடிகிறது. பெரும்பாலும் மஞ்சத்தைச் செதுக்கும் சிற்பியின் கற்பனைக்குட்பட்ட வகையில் மஞ்சத்தின் அமைப்பில் மாற்றங்

களையோ, புதுமைகளோ சிற்பி கொண்டுவரலாம். கோயிற் சுட்டட அமைப்பில் வசந்த மண்டபத்தைக் குறிக்கும் மஞ்சத்திற் கடவுளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாயில் அமைக்கப்படும். பெரும்பாலும் மூன்று வாயில்கள் இடம்பெறுவதைக்காணல மஞ்சத்தில் இடம்பெறும் சிற்பங்கள் பெரும்பாலும் அக்கோயில் மூலமூர்த்தி யின் அற்புதச் செயல்கள், புராண சம்பவங்களை விளக்குவனவாகவே அமையும். கின்னரர்கள், அப்ஸரஸர் களின் வடிவங்களும் இதில் இடம்பெறும்

மஞ்சம் ஒரு வகையில் அழகியல் அம்சத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. கோயிற் கட்டடக் கலையில் வசந்தமண்டபம் எழுந்தருளி மண்டபம் என்றும் அழைக்கப்படும். உற்சவ மூர்த்திகளை அலங்காரம் செய்து உலாக்கொண்டு வருதல் மஹோற்சவ காலத்தில் முதன்மை பெறுகின்றது. இந்த வகையிற் சாத்துப்படி அலங்காரம் சிறப்புடையது. கோயில் உற்சவ காலத்தில் வீதியுலாவிற்கு முன் இறைவனும் இறைவியும் சாத்துப்படி அலங்காரங்களினால் நன்கு அலங்கரிக் கப்பட்டு அழகுறக் காட்சியளிப்பது வழக்கம். கோயில்

வழிபாட்டில் பக்தியும் அழகும் இணைந்திருப்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இத்தகைய அலங்காரக் கலையிற் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் ”அலங்கரணாசாரியார்” என்று அழைக்கப்படுகிறார். வசந்த மண்டபத்தில் உள்ளஉற்சவமூர்த்திகளுக்குத் தீபாராதனை, அர்ச்சனை (சோடோபசாரம் உட்பட) தோத்திரம், திருமுறை, ஆசீர்வாதம் போன்றன இடம்பெற்று சுவாமி அத்தினத்திற்குரிய வாகனத்தில் வீதியுலாவருவது வழக்கம். மஞ்சத் திருவிழா அன்று சுவாமி மஞ்சத்தில் எழுந்தருளி வலம்வருவார். மஞ்சத்தின் அழகும், சுவாமியின் அழகும் வழிபடு வோரின் உள்ளத்தில் பக்தி உணர்வைத் தூண்டி வழிபாட்டில்ஈடுபட வைப்பது முக்கியத்துவம் பெறுகிறது. கோயிலிற் பிரதான பகுதியான கர்ப்பக்கிருகக் காற்பிரவாய் அளவைப் பொறுத்தே அதன் ஏனைய உறுப்புக்கள் இடம் பெறுகின்றன. கட்டட அளவுகளுக்கு ஆயாதிப் பொருத்தம் பார்த்தே அமைக்கப்படுகிறது. அந்த வகையில் வசந்தமண்டப அளவைப் பொறுத்தே மஞ்சம் அமைக்கப்படுகிறது.

**மஞ்சமும் தேரும்:**

தேர் ஓடுங்கோயில் என்று அழைக்கப்படும். தேரைச் செய்வதற்குரிய விதிமுறைகளே மஞ்சத்திற்கும் பின் பற்றப்படுகின்றன. தேரும் மூன்று பகுதிகளைக் கொண்டது. தேரில் மூன்றாவது பதியான பண்டிகை எண்கோண வளைவுடையதாகவும், யானிக் சுட்டைகள், குதிரைக் கட்டைகள், கடைச்சல் குமிழ்களைக் கொண்டதாகவும் உள்ளது.

இரண்டாவது பகுதியில் செதுக்கல் வேலைப்பாடுகள் இடம் பெறுவதுடன் விக்கிரக வரியில் விக்கிரகங்கள், மரக்கட்டைகள், அன்னக்கட்டைகள், கடைச்சல் தூண்கள் இடம்பெறுகின்றன. மஞ்சத்தைவிட தேர் செதுக்கல் வேலைப்பாடுகள் அதிகம் கொண்ட தாகக் காணப்படுகிறது. தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமை உணர்த்தும் உருவங்கள் செதுக்கப்படல் வேண்டும். கீழே அதி‘டானத்தில் சிங்கங்கள், யாளிகள். மகரங்கள் நுணுகிய ”மடிப்பு” வேலைப் பாடுகள் இடம்பெறுவன. (கா. கைலாசநாதக் குருக்கள், சைவத் திருக்கோயிற் கிரியை நெறி. பக். 98) தேரிற் சதுரவடிவான தேர் நாகரம் எனவும், எண்கோண வடிவினது திராவிடம் எனவும், வட்டவடிவினது வேசரம் எனவும் அழைக்கப்படும். மஹோற்சவத்திற்குரிய தேருக்கு ஆறு முதல் பத்துவரை சில்லுகள் இருக்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு தேரின் வேதிகளின் எண்ணிக்கையும் வேறுபடும்.

சிவனுக்குரிய தேருக்கு ஒன்பது வேதிகைகளும் ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகைகளும் கூறப்பட்டுள்ளன. (கா. கைலாசநாதக் குருக்கள். பக்.98). தேருக்கு அடித் தளமான அடிப்படையாய் விளங்கும் பகுதிகள் ஆதாரம் என்றும், உபாதாரம் என்றும் அழைக்கப்படும். இங்கு தேரின் அச்சு பொருத்தப்படும். இதற்குமேல் தளங்கள் இடம்பெற வேண்டும். ஒவ்வொன்றும் மற்றதைக் காட்டிலும் குறைந்த உயரம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் இடம்பெறுகின்றன.(கா. கைலாசநாதக் குருக்கள். பக்.98).

கோயில் உற்சவங்களிற் தேர் சூரியனைக் குறிப்பதாகவும், பகலில் இழுக்கப்பட வேண்டும் எனவும், மஞ்சம் சந்திரனைக் குறிப்பதாகவும். அது இரவில் இழுக்கப்பட வேண்டியது எனவும், அது நிலவொளியில் அழகுறத் தோற்றமளிக்கும் என்பதுவும் ஐதீகம்.

பிரமோற்சவத்தில் சப்பறமும் சிறப்புடையது. சப்பை ரதமே சப்பறம் என மருவியிருத்தல் வேண்டும். கோயிற் கட்டட அமைப்பில் கோபுரத்தை ஒத்த வடிவினதாக இது அமைகின்றமை கவனிக்கத்தக்கது.

**மஞ்சத்திற்குரிய மரங்கள்:**

மஞ்சத்தின் அடித்தளம், சில்லு, நட்டுப்பார் போன்ற பகுதிகள் பெரும் பாலும் மருது மரத்தினாற் செய்யப்படும். சில்லுகளை இணைக்கும் பகுதியே நட்டுப்பார். இவை கனதியானவையாக இருக்க வேண்டும். ஏனைய கர்ணகூடு, பண்டிகை போன்றவை மஞ்சமுண்ணா, பலா, மகோக்கனி போன்ற மரங்களி னாற் செய்யப்படலாம். அவை கனதி குறைந்தவையாக இருத்தற் பொருட்டு அத்தகைய மரங்களினாற் செய்யப் படுவதாக சிற்பாசாரியர்கள் கூறுகின்றனர். மஞ்சத்தின் முன்னாற் பூட்டப்படும் குதிரைகள் பலா, மகோக்கனி போன்ற மரங்களினாலேயே அதிகம் செய்யப்படு கின்றன. கோயில் அமைப்பில் வசந்தமண்டபத்தில் உள்ள பீடத்தின் அளவை ஒத்ததாக மஞ்சம் அமைக்கப் படும். இந்துக்கலை மரபில் அளவைப் பிரமாணம் முக்கியத்துவம் பெறுகிறது. சிற்ப, விக்கிரகங்கள், கட்டடங்களைப் பொறுத்தமட்டில் அளவைப் பிரமாணந் தவறிய வடிவங்கள் அமங்கலமானவை. அவை வழிபாட்டிற்குரியன அல்ல. அவை நாட்டிற்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிப்பன என்பது சிற்ப சாஸ்திரங்களின் கருத்து. எனவே அளவைப்

பொருத்தங்களுடன் கோயிலில் இடம்பெறும் கட்டடம், சிற்பம், தேர், மஞ்சம், சப்பறம் போன்ற அனைத்தும் இடம்பெறவேண்டும் என்பது விதி. விதிமுறையைப் பின்பற்றிச் செய்யப் படுவதன்மூலம் ஒத்திசைவும். அழகும் வெளிப்படுத்தப்படுகின்றன.

**கோயிற் கலைகளும் தத்துவமும் :**

கோயிற் கட்டடம் ஒரு வகையில் சிற்பம், ஓவியம் போன்ற காண்பியக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது. ஆகமங்கள். சிற்பசாஸ்திரங்கள் கூறும் விதிமுறைகளைப் பின்பற்றிக் கோயிற் கட்டடங்கள் அமைக்கப்படுவதுடன், கோயில் வழிபாட்டு முறைகளும் ஆகம மரபு சார்ந்ததாகவே இடம்பெறுகின்றன. இறைவனைத் தோத்திரம், நடனத்தினாலும் வழிபட முடியும் என்ற ஆகம விதியே கோயில்கள் கலைகளைப் பேணுவதற்கும் அவற்றைக் கையளிப்புச் செய்வதற்கும் காரணமாயின. இந்த வகையில் இற்றைவரை கோயில்சார்ந்த கலைகளின் வளர்ச்சியை இங்கு கவனத்திற் கொள்ளலாம். இந்துக்கள் இறைவனையே ஆடவல்லானாகவும், இசைவல்லானா கவும் கண்டுபோற்றியதுடன் இசை, நடனம் போன்ற கலைகளுக்குத் தெய்வீகத் தன்மையைக் கொடுத்தமை அவற்றை வளர்த்தெடுக்கக்காரணமாயிற்று.

கலைகளுக்கு நிலைக்களனாக அமைந்த கோயிற் கட்டங்கள் பூமியில் தேவ உலகினைச் சிருஷ்டிப்பனவாக அமைகின்றன. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு எனக் கூறுவர். அந்த வகையிற் கோயிற் கட்டடமானது இந்து அண்டவியலை அடிப் படையாகக் கொண்டது. பஞ்சபூதங் களில் ஒன்றான் பிருதுவி தனது மேற்தளத்தை கட்டடங்களுக்கு வழங்கு கிறது. இது மனிதர்களும், தேவர்களும் வசிப்பதற்கான இடம். வாஸ்து சாஸ்திர நூல்கள் தேவர்களும், மனிதர்களும் எந்தெந்த இடங்களில் வசிக்கிறார்களோ அந்தந்த இடங்கள் “வாஸ்து” என் அழைக்கப்படும் எனக் கூறுகின்றனர். வாஸ்து என்பது”வாழும் இடம்” என்று பொருள்படும்.

வாஸ்து புருஷ மண்டலத்தின் அடிப்படையிலேயே கோயிற் கட்டடங்கள் அமைக்கப் படுகின்றன. கோயிற் கட்டடங்களின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் புருஷனது உடலுறுப்புக்களைக் குறியீடாகக் கொண்டிருப்பவை. வாஸ்து புருஷமண்டலத்தின் மையப்பகுதியான பிரம பதத்திலேயே கோயிற் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. பிரம்மஸ் தானத்தை அடுத்து தெய்வீக பதம், மானுஷபதம் போன்றவை இடம்பெறு கின்றன. தேவர்களும்,

மனிதர்களும் சூழ உள்ள இடங்களாகவே கோயிற் கட்டடங்கள் உள்ளன. புருஷனது சிரசு, கழுத்து, மார்பு, வயிற்றுக் கீழ்ப்பகுதி, தொடை, முழங்கால், கீழ்க்கால், பாதம் போன்றன முறையே கற்பக் கிருகம், அர்த்த மண்டபம், ஸ்தபனமண்டபம், ஸ்தம்பமண்டபம், சபாமண்டபம், பிரதானவாயில் வசந்தமண்டபம். பிரதானவாயிற் கோபுரம் போன்ற கோயில் உறுப்புக்களாக வடிவமைக்கப் படுகின்றன. திருமந்திரம் இத் தத்துவத்தை அழகுற விளக்கி நிற்கிறது. “காயமே கோயில்“ என்பது இந்துக் கொள்கை நாம ரூபம் அற்ற, அகண்டாகார வஸ்துவான பரம்பொருளுக்கு எல்லை வகுத்து உறைவிடம் அமைத்து வணங்கும் வழிபாட்டில் அத்தகைய உறைவிடங்களைக் குறியீடாக உடைய தேர், மஞ்சம், சப்பறம் போன்ற வடிவங்களை அழகுற நிர்மாணித்து, அதிற்பரம்பொருளை வீதியுலாக் கொண்டு வருதலின் தத்துவம் முக்கியமானது. இவ்வாறு பரம்பொருள் வீதியுலாவரும்போது மக்கள் யாவரும்

கண்டு, இன்புற்று அருள்பெற முடியும் என்ற உண்மை வெளிப்படுகின்றது. ஆன்மாக்கள் முத்திப்பேறு பெறுவதற் குத் தாம் முயலவேண்டும் என்பதுடன் இறைவனும் அருள வேண்டும் என்பது தத்துவம் இறைவனது திருவருள் இன்றி முத்தி கைவரப் பெறாது. அந்த வகையில் திருவருளைப் பெறும் வழிகளாகவே உற்சவங்கள் இடம்பெறு கின்றன.

பரம்பொருள் சத், சித், ஆனந்தம் என்ற இயல்பினை உடையது. அதன் ஆனந்த இயல்பே ஆன்மாக்களின் மீது கொள்ளும் கருணை ஆகும். ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாகப் பரம் பொருள் தன் சக்தியுடன் இணைந்து தடத்த நிலைக்கு வந்து உருவம் தாங்கி ஆன்மாக்களுக்கு கருணை பொழியும் இடங்களாகிய கோயில்களில் வருடமொருமுறை இடம்பெறும் மஹோற்சவத்தில் மஞ்சத்தில் வீதியுலா வந்து அருள்தரும் நாளைக் கவனத்திற் கொள்வோமாக. பரம்பொருள் சக்தியின்றி இயங்கமுடி யாதது. அந்தச் சக்திக்கே கோயிலாக அமைந்த துர்க்கை அம்பாள் தேவஸ்தான மஹோற்சவத்தில் மஞ்ச விழாவில் இறைவியைத் துதித்து அருள்பெறும் நாளை வாழ்வில் பெரு நாளாகக் கொள்வோமாக.

கலாநிதி ஏ.என். கிருஷ்ணவேணி
தலைவர். நுண்கலைத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

# முப்பெரும் தேவியர்க்கும் திருவிழா




தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தின் நான்காம் நாள் மாலை உற்சவம் முப்பெரும் தேவிகளுக்குமான மகோன்னதமான திருவிழாவாக நடைபெறுவது வழமை. அழகிய வசந்த மண்டபத்திலே மலைமகளான துர்க்கை அம்பாள் அலைமகளான மகாலட்சுமி தேவியுடனும் கலைமகளான சரஸ்வதி தேவியுடனும் வீற்றிருக்க முச்சக்திகளுக்கும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

முப்பெரும் தேவியரும் வீதிவலம் வருகின்ற போது இம்முறை கலைமகளாக, அலைமகளாக, மலைமகளாக வேடமணிந்த குழந்தைகளும் சேர்ந்து வலம் வந்த திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெறுவது போல ஈழத்தில் எமது ஆலயத்தில் குழந்தைகளை தெய்வங்களாக பார்க்கும் வழக்கம் ஆரம்பமாகி இருப்பதை பலரும் வரவேற்று வருகின்றனர். குழந்தைகளும் ஆர்வத்துடன் சோர்வின்றி உள்வீதி வெளிவீதி இரண்டிலும் வலம்வந்தமை அவர்களின் ஆர்வத்தை காட்டுகிறது.






மேலும் அடியார்களின் கற்பூரச் சட்டிகளுடன், குருபத்தினிகள் திருவிளக்கு ஏந்திவர முப்பெரும் தேவியரும் தாமரை வாகனத்தில் வீதியுலா வந்தார்கள். உள்வீதியில் வீணாகானம் வாசிக்கப்பட்டது. இவ்வாறு பல சிறப்புக்களோடு நேற்றைய திருவிழா இடம்பெற்றது.

இனிவரும் காலங்களில் திருமுறைத் திருவிழாவில் நாயன்மார்களாகவும், முப்பெரும் தேவியர் திருவிழாவில் அம்பாளின் மூர்த்தங்களாகவும் குழந்தைகளை ஆர்வத்துடன் பெற்றோர் வேடம் அணிவித்து அழைத்துவர நாட்டம் கொண்டுள்ளார்கள்.









# திருமுறைக்கு ஒரு திருவிழா!




தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தில் மூன்றாம் திருவிழா திருமுறைத் திருவிழாவாக நடைபெறுவது வழமை. பன்னிரு திருமுறைகளையும் முழுமையாக பதிப்பித்து, வெளியீடு செய்து, ஆலயங்களுக்கு இலவசமாக வழங்கி வரும் தேவஸ்தானம் திருமுறைகளுக்கு என்றொரு மடத்தையும் உருவாக்கியுள்ளமை திருமுறைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்பதற்கு சாட்சியாக உள்ளது.

சைவ சமயத்தின் காவலர்களாக இருந்த நான்கு சமய குரவர்வகள் சகிதமாக அம்பாளுக்கு விசேட பூசைகள் நடைபெற்று திருவீதியுலா வருவது வழமை. இந்த வருடம் அதிலும் ஒரு புதுமை.

சமய குரவர்களாக தமது பிள்ளைகளை ஆடை அணிகலன்களோடு தயார்படுத்தி பெற்றோர் அழைத்து வந்திருந்தனர். குழந்தைகள் குரவர்களாக மாறி, கைகளில் திருமுறை நூல்களை தாங்கி, அம்பாளோடு வீதியுலா வந்தமை தெய்வீகமான காட்சியாக இருந்தது. எந்த குழந்தையும் இவ்வாறு வேடம் பூண்டு பங்குபற்றலாம் என்பது தனிச்சிறப்பு. குழந்தைகளை இவ்வாறு ஆன்மீகத்தோடு ஒன்றிக்கச் செய்வதே எதிர்காலம் சிறப்புடன் இருக்க ஒரே வழி.





# சுந்தர ஆஞ்சநேயருக்கு பக்தி பூர்வமாக நடைபெற்ற மகாகும்பாபிஷேகம்





யாழ்.மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேகம் 28.08.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆலயத்தில் கும்பாபிஷேகப் பூர்வாங்க கிரியைகள் கடந்த 20 தேதி ஆரம்பமாகி எண்ணை காப்பு கிரியைகள் கடந்த 25ஆம் தேதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெற்றன.

28.08.2025 அதிகாலையில் இருந்து விசேட பூசைகள் நடைபெற்று சுந்தர ஆஞ்சநேயருக்கு மகா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்கள் மண்டலா அபிசேக பூசைகள் இவ் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆஞ்சநேய பக்தர்கள் கும்பாபிஷேக நிகழ்வில் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.







# தொண்டைமானாறு செல்வ சந்நிதியான் ஆலயத்தில் 108 ஜோடிகளுக்கு திருமணம் செய்துவைத்த தம்பதிகள்



வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வ சந்நிதியான் ஆலயத்தில் 28.08.2025 அன்று திருமணமாகாத 108 ஜோடிகளுக்கு திருமணம் இனிதே நடைபெற்றது.

அன்னதான கந்தன் என சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வ சந்நிதியான் ஆலயத்தில், யாழ் மாவட்டத்தில் தேர்தெடுக்கப்பட்ட வறுமையில் உள்ள திருமணாகாத 108 ஜோடிகளுக்கு, சிங்கப்பூரில் வாழும் தம்பதியினர், திருமணம் செய்துவைப்பதற்கான உதவியினை வழங்கி இருந்தனர் .

மணமக்களுக்கு தேவையான தாலி, கூறை சேலை மற்றும் திருமணத்திற்கான இதர செலவுகளுக்கும் பணம் வழங்கப்பட்டு , 108 தம்பதிகளுக்கும் செல்வ சந்நிதி ஆலயத்தில் திருமணம் இனிதே நிறைவுபெற்றது. இந்த 108 தம்பதியினரையும், யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்கள் ஊடாகவே தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தொண்டைமானாறு செல்வ சந்நிதியான் ஆலயத்தில் குழுமியிருந்த பக்தர்கள் வாழ்த்துக்கூற மணமக்களின் திருமணம் இனிதே நடந்த நிலையில், திருமணம்

செய்து வைக்க பேருதவி வழங்கிய சிங்கப்பூர் தம்பதிகளுக்கும் மணமக்களுக்கும் சமூகவலைத்தளங்களில் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றது.

அதேவேளை வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வ சந்நிதியான் ஆலய வருடாந்த பெரும் திருவிழா தற்போது இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





